நாள் - 25.02.2026

**C.C. No**.134/2024

**D.W**.1-பாலசுப்ரமணியம், த/பெ. செல்லமுத்து

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 25th **day of February** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரி எனது மகன். எனது மகன் என்ன கார் வைத்து இருந்தார் என்றால் மகேந்திரா கார் வைத்திருந்தார். நான் முதல் விசாரணையில் நாங்கள் எதற்காக எங்கு சென்று எங்கு செல்வதற்காக சென்று கொண்டு இருந்தோம் என குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன் காரும் வேகமாக செல்லக்கூடிய கார் தான் என்றால் சரிதான். எனது மகன் சாலையில் காரினை அதிவேகமாக ஓட்டிச் சென்று முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி மேற்படி முன்னால் சென்ற வாகனம் நிலை தடுமாறி பாலத்தில் இருந்து கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றும் எனது என்னுடைய மகனின் அஜாக்கிரதையால் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனம் எங்கள் வாகனத்தின் பக்கவாட்டில் வந்து மோதி கீழே அவராக விழுந்து விட்டார்.

2. பொதுவாக சாலையில் நேராக வரும் வாகனங்கள் பக்கவாட்டில் வந்து வாகனங்களை மோத வாய்ப்பு இல்லை என்றும் என்னுடைய மகன் தான் வேகமாகச் சென்று முன்னால் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் எதிரி என்னுடைய மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையின் பொழுது என்னுடைய மகன் மீது எந்த தவறும் இல்லை என்றும், சம்பவத்தில் இறந்த நபர்தான் எங்கள் வாகனத்தின் மீது பக்கவட்டில் வந்து மோதினார் என குறிப்பிட்டு சொல்லி உள்ளோமா என்றால் சொல்லி உள்ளேன். அன்றைய தினம் நான் எனது மகனுடன் பயணம் செய்யவில்லை என்றும் அவ்வாறு சென்று இருந்தால் எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும் ஆகவேதான் விபத்து நடந்த விபரம் கூட எனக்கு தெரியாமல் எனது மகனுக்கு ஆதரவாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.25 18:12:51 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**